# தனி ஆள் வருமான வரி தாக்கலுக்கான குடியாளர் வரி வழிகாட்டி (படிவம் B1)

**தாக்கல் செய்ய வேண்டிய இறுதிநாள்: 15 ஏப்ரல் 2022**

வரிப் படிவத் தாக்கலுக்கான அறிக்கையை நீங்கள் பெற்றிருந்தால் தாக்கல் செய்வது கட்டாயமாகும்.

INLAND REVENUE AUTHORITY OF SINGAPORE

## வரி மதிப்பீட்டு (YA) ஆண்டு 2022-ஆன பொது தகவல்கள்

இத்தகவல்கள் வரி செலுத்துபவர்களின் வரிக் கடமைகளை புரிந்து கொள்ள வேண்டிய மேம்பட்ட பொதுத் தகவல்களே அன்றி எழக்கூடிய அனைத்து ஐயங்களுக்கும் தீர்வு காணும் நோக்கமுடையவை அல்ல.

இந்த தகவல் வாடகை வருமானத்தை அறிவித்தல் காரணத்திற்காக 11 ஏப்ரல் 2022- இல் புதுப்பிக்கப்பட்டது. இந்த தகவல், நடைமுறையில் உள்ள சட்டங்கள் மற்றும் செயல்முறைகளை ஒத்து இருப்பதை உறுதிபடுத்த எல்லா முயற்சியும் எடுக்கப்படும் அதே வேளையில், ஏதாவது மாற்றங்கள் ஏற்படுமாயின் அதற்கேற்ப எங்கள் நிலைப்பாட்டை மாற்றிக்கொள்ளும் உரிமை IRAS-கு உள்ளது.

| | |
|---|---|
| **உதவி தேவையா?** | **IRAS – இன் இணையதளத்தைப் பார்க்கவும்.**<br>• வரிப் பற்றிய பொதுவான மேல் விபரங்களைத் தெரிந்துகொள்ள;<br>• Ask Jamie என்ற மெய்நிகர் உதவிச் சேவையை (Virtual Assistant) அணுகி, வரி தொடர்பான கேள்விகளுக்கு விரைவில் பதில் பெற அல்லது எங்களுடன் இணையத்தில் உரையாட;<br>• வரி நிவாரணங்களுக்கான உங்களின் தகுதி நிலையை சரிபார்த்துக் கொள்ள "Personal Reliefs Checker"–ஐ பயன்படுத்த;<br>• உங்கள் வாடகை வருமானத்தைக் கணக்கிட "Rental Calculator"-ஐ பயன்படுத்த; மற்றும்<br>• உங்கள் வருமான வரி கடன்பாட்டை கணக்கிட "Income Tax Calculator"-ஐ பயன்படுத்த.<br><br>கீழ்க்காணும் வழிகளில் **எங்களைத் தொடர்பு கொள்ளவும்:**<br>**அழைக்க:** 1800-3568300 **மின்னஞ்சல்:** mytax.iras.gov.sg (myTax Mail-ஐ பயன்படுத்தி) |
| **வரி மதிப்பீட்டு ஆண்டு 2022–ஆன வருமான வரி விகிதங்கள்** | வரி மதிப்பீட்டு ஆண்டு 2022-இன் வரி விகிதங்களைத் தெரிந்துகொள்ள IRAS – இன் இணையதளத்தை காண்க. |
| **இணைப்புகள் 1 & 2** | உங்களுக்குத் தேவையிருப்பின் மட்டும் தயவுசெய்து இணைப்பு 1 மற்றும்/அல்லது 2-ஐ பூர்த்தி செய்து படிவம் B1-உடன் இணைத்துதாக்கல் செய்யவும். |
| ஆவணங்களை சமர்ப்பித்தல் | • உங்களிடம் கேட்கப்பட்டிருந்தாலொழிய, உங்களின் படிவம் B1- உடன் காப்புறுதி சந்தாக்கள், நன் கொடைகள், கல்விக் கட்டணங்கள் போன்றவற்றுக்கான கட்டணச்சீட்டுகள் போன்ற துணை ஆவணங்களை **அனுப்ப வேண்டாம்**. நீங்கள் அனுப்பிய கட்டணச்சீட்டுகள் எதுவும் திருப்பித்தரப்பட மாட்டாது, மேலும் அவை அழிக்கப்பட்டுவிடும்.<br>• உங்கள் வரிப் படிவத்தில் அறிவித்த வருமானம், கழிவுகள் மற்றும் நிவாரணங்களுக்கான அனைத்து முறையான பதிவேடுகள் மற்றும் ஆவணங்களை நீங்கள் வைத்திருக்க வேண்டும்.<br>• தயவுசெய்து நீங்கள் கோரும் நிவாரணங்கள் மற்றும் கழிவுகள் போன்றவைக்கு முறையான பதிவேடுகளையும், கட்டணச்சீட்டுகளையும் மற்றும் ஆவணங்களையும் சரிப்பார்ப்பதற்கு ஏதுவாக குறைந்தது 5 வருடங்களுக்காவது பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டும். |

| **படிவம் B1-இன், பக்கம் 2-இன் பிரிவு A மற்றும் இணைப்பு 1-ஐ பூர்த்தி செய்தல்: வருமானம்** | |
|---|---|
| 1. வேலை | **மதிப்பீட்டில் தானே சேர்த்துக்கொள்ளப்படும் வேலை வருமானம்**<br>(தானே சேர்த்துக்கொள்ளப்படும் திட்டத்தில் (AIS) பங்குபெறும் முதலாளிகளின் பட்டியலை IRAS– இன் இணையதளத்தை காண்க)<br>• உங்கள் வேலை வருமானம் பற்றிய தகவலை நாங்கள் நேரடியாக உங்கள் முதலாளியிடமிருந்து பெற்றுக்கொள்வதால், நீங்கள் இது பற்றிய விவரங்களைத் **தர வேண்டாம்.** நாங்கள் இந்த தகவலை தானாகவே உங்கள் மதிப்பீட்டில் சேர்த்து விடுவோம். **மாறாக, "0" என்று குறிப்பிடவும்.**<br>• உங்கள் தேசிய சேவையாளர் சம்பள விவரங்களை குறிப்பிடத் **தேவையில்லை**, இந்தத் தகவலை தற்காப்பு அமைச்சு/சிங்கப்பூர் காவல் துறை / குடிமைத் தற்காப்புப் படை ஆகியவற்றிடமிருந்து நாங்கள் நேரடியாகப் பெறுகிறோம். **மாறாக, "0" என்று குறிப்பிடவும்.**<br><br>**மதிப்பீட்டில் தானே சேர்த்துக்கொள்ளப்படாத வேலை வருமானம்**<br>• சம்பளத்தொகை, ஊக்கத்தொகை, இயக்குநரின் கட்டணம் மற்றும் பிற வகை வேலை வருமானம் முதலியவற்றை உங்களின் படிவம் IR8Aஇல் இனம் 1(a) இருந்து1(d) வரை இருப்பதுபோலவே படிவம் B1-இன் பக்கம் 2-இல் முறையே குறிப்பிடவும். மற்ற வகை வேலை வருமானத்தில், பகுதி நேர வருமானம், படித்தொகைகள், பணமல்லாத சலுகைகள், பணிக்கொடைகள், ஓய்வூதியம் (சிங்கப்பூர் அரசு ஓய்வூதியத்தை தவிர) மற்றும் வரிக்குட்பட்ட ரொக்கம் அல்லது பணமல்லாத சலுகைகள், அதாவது பங்குத்தேர்வு உரிமையிலிருந்து பெறப்பட்ட ஆதாயம் போன்றவை அடங்கும்.<br>• நீங்கள் IR8A படிவத்தை 31 மார்ச் 2022-உள் உங்கள் முதலாளியிடமிருந்து பெறவில்லையெனில், 2021-ஆம் ஆண்டிற்கான உங்களின் உத்தேச மதிப்பு வருமானத்தைக் கொடுக்கலாம். எனினும், அன்புகூர்ந்து உங்கள் படிவம் IR8A- ஐ பெற்றவுடன் எங்களுக்கு அனுப்பி வைக்கவும்.<br>• பின்வரும் நிபந்தனைகளை நிறைவு செய்தால் தயவுசெய்து படிவம் IR8A/S மற்றும்/அல்லது இணைப்புகள் 8A/8B-ஐ அனுப்பிவையுங்கள்:<br>(அ) உங்கள் வருமான வரியை உங்கள் முதலாளி கட்டுவதாகயிருந்தால்; அல்லது<br>(ஆ) நீங்கள் பங்குத்தேர்வு உரிமையிலிருந்து ஆதாயம் பெற்றிருந்தால்; அல்லது<br>(இ) நீங்கள் வழக்காமான குடியிருப்பாளர் அல்ல (NOR) எனும் சலுகையைக் கோரினால். |

| | |
|---|---|
| | **வேலைச் செலவுகள்**<br>• உங்கள் முதலாளியால் திருப்பித் தரப்படாத, அலுவலக கடமைகள் தொடர்பாகச், செய்த செலவுகளை நீங்கள் கோரலாம். எடுத்துக்காட்டாக, போக்குவரத்து செலவுகள் (மோட்டார் வண்டிகளுக்குச் செய்த செலவுகளைத் தவிர்த்து), விருந்து உபசரிப்புச் செலவுகள், நிபுணத்துவ அமைப்புகளைக்குக் கட்டிய சந்தாக்கள், ஸாகாட் ஃபிட்ரா மற்றும் ஸாகாட் ஹர்ட்டா மற்றும் பள்ளிவாசல் கட்டட நிதியுதவி (உங்கள் முதலாளி தானே சேர்க்கும் வேலை வருமானத் திட்டத்தில் (AIS) இருந்தால் உங்கள் வருமானத்திலிருந்து கழிக்கப்பட்ட தொகையைத் தவிர மற்ற தொகை).<br>• உங்களின் முதலாளியின் வேண்டுகோளின்படி நீங்கள் வீட்டிலிருந்தபடி வேலை செய்ததன் மூலம் பல கழிவுகள் ஏற்பட்டிருப்பின், உதாரணத்திற்கு மின்சாரம், தொலைத்தொர்பு கட்டணங்கள், மற்றும் இச்செலவுகளை உங்கள் முதலாளி ஈடு செய்யவில்லை எனில் நீங்கள் இச்செலவுகளை வேலைச் செலவுகள் என வேலை வருமானதிற்கு எதிராக கழிவு கோரலாம். மேல் தகவல்களுக்கு, செல்க IRAS' website [Home > Taxes > Individual Income Tax > Basics of Individual Income Tax > Tax reliefs, rebates and deductions > Employment expenses]<br>• அன்புகூர்ந்து செலவின் தன்மை, செலவு செய்த நாள், செலவிட்ட தொகை போன்றவற்றை குறிப்பிட்டு, ஏற்பட்ட **உண்மையான** செலவுகளுக்காக ஒரு பட்டியலை உங்கள் வரிப் படிவத்துடன் நீங்கள் இணைக்க வேண்டும். மேலும் அனைத்து கட்டணச்சீட்டுகளையும், சரிப்பார்க்கும் நோக்கத்திற்காக நீங்கள் வைத்திருக்க வேண்டும். உத்தேச மதிப்பீடுகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.<br>• நீங்கள் சிங்கப்பூர் அடையாள அட்டை / வெளி நாட்டவர் அடையாள அட்டை வைத்திருப்பவராக இருந்து, சிங்கப்பூர் இஸ்லாமிய சமய மன்றத்திடம் (MUIS) விவரம் கொடுத்திருந்தால், ஸாகாட் ஃபிட்ரா அல்லது ஸாகாட் ஹர்ட்டா கட்டணத்திற்கு கழிவு கோர வேண்டாம். அந்த தொகை தானகவே உங்களுடைய எற்ற வருமான மூலத்திற்கு எதிராக முறையே கழித்துக்கொள்ளப்படும். |
| மற்ற வருமானம் (2021-ஆம் வருடத்தில் இனங்கள் 1 முதல் (9) வரையில் பட்டியலிடப்பட்டுள்ள வருமானத்தை நீங்கள் ஏதேனும் கொண்டிருந்தால், இணைப்பு 1-ஐ பூர்த்தி செய்யவும்) | |
| **1. வர்த்தகம், வியாபாரம், தேர்ச்சித் தொழில்** அல்லது **வாழ்க்கைத் தொழில்** | • தேர்ச்சித் தொழில்/வாழ்க்கைத் தொழிலிருந்தான ஆதாயங்கள் என்பது சுய-வேலை செய்யும் நபர்களால் சம்பாதிக்கப்பட்ட வருமானத்தைக் குறிக்கும் (எ.கா. மருத்துவர், காப்பீட்டு/சொத்து முகவர், நியமிக்கப்பட்ட வணிகரின் பிரதிநிதி , தனியார் ஆசிரியர், உணவங்காடி வியாபாரி, வாடகைக் கார் ஓட்டுநர், ஒப்பந்தகாரர்). வர்த்தகம்/வியாபாரத்திற்கு, அன்புகூர்ந்து அமைப்பின் தனிச் சிறப்பு எண் (UEN)/கூட்டுத்தொழில் வரி குறிப்பு எண்ணை கொடுக்கப்பட்டுள்ள பெட்டியில் குறிப்பிடவும். |
| **2. சொத்திலிருந்து** கிடைக்கும் **வாடகை** | • மொத்த வாடகையில் அறைகலன் மற்றும் பொருத்துமானங்களின் வாடகையும் உள்ளடங்கும். வாடகை வருமானம் ஈட்டும் ஒரே நோக்கத்திற்காக வாடகை காலத்தின் போது செய்யப்பட்ட செலவுகளை நீங்கள் கோரலாம்.<br>வாடகை வருமானத்தை அறிவித்தல்<br>• வாடகைக்கு விடுவதன் மூலம் உங்களுக்கு வாடகை கிடைத்திருந்தால்:<br>(அ) 2021-இல் ஒரு தனி அல்லது கூட்டு உரிமையுள்ள சொத்திலிருந்து நீங்கள் வாடகை பெற்றிருந்தால் அன்புகூர்ந்து மொத்த வாடகை/ஏற்பட்ட செலவுகளின் விவரங்களைத் தரவும் மேலும் சட்டரீதியான உரிமையின் அடிப்படையில் நிகர வாடகையில் உங்கள் பங்கைக் குறிப்பிடவும்.<br>(ஆ) உங்கள் சொத்தின் ஒரு பகுதியை வாடகைக்கு விடும்போது (எ.கா 1 அறை) நீங்கள் வாடகைக்கு விடப்படும் அறைகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் கோரக் கூடிய செலவுகளை பிரித்து கணக்கிட வேண்டும்.<br>• சொத்து வரியைத் தாமதமாகச் செலுத்தியதற்கு விதிக்கப்பட்ட அபராதம், முந்திய ஆண்டுச் சொத்து வரி, முதல் அறைகலன்களுக்கான செலவுகள், அறைகலன் மற்றும் பொருத்துமானங்களுக்கான தேய்மானச் செலவுகள், முதல் பழுதுபார்ப்பு மற்றும் புதுப்பிப்புச் செலவுகள், திருப்பிக் கொடுத்த கடன் தொகை, சொத்திற்கு செய்யப்பட்ட சேர்க்கைகள் மற்றும் மாற்றங்களுக்கான செலவுகள் போன்ற கழித்துக்கொள்ள முடியாத செலவுகலைக் கோராதீர்கள்.<br>• 2021-இல் எந்த ஒரு காலகட்டத்திலாவது உங்கள் சொத்து காலியாக இருந்திருந்தால், அக்காலகட்டத்தின் போது அச்சொத்தின் மேல் உங்களுக்கு ஏற்பட்ட பழுதுபார்ப்பு, காப்புறுதி, பராமரிப்பு மற்றும் பேணுதல் போன்ற எவ்வகையான செலவுகளையும் மற்றும் சொத்து வரியையும், நீங்கள் உங்கள் சொத்திலிருந்து கிடைக்கும் வருமானத்திற்கு எதிராகக் கோரலாம். இது குத்தகைகளின் இடையே சொத்து காலியாக இருக்கும்போது, புதிய குடியிருப்பபாளரைப் பெற நியாயமான முயற்சி எடுக்கப்பட்டிருக்க வேண்டும் எனும் நிபந்தனைக்கு உட்பட்டது.<br>• மேலும் வரி மதிப்பீட்டு (YA) ஆண்டு 2022- இல் இருந்து உங்கள் சொத்தின் முதல் குடிப்பபாளரின் குத்தகையை நீங்கள் பெறும்போதோ, கொடுக்கும்போதோ, புதுப்பிக்கும்போதோ அல்லது முதல் குத்தகையை நீட்டிக்கும்போதோ ஏற்படும் தரகு, விளம்பரம் மற்றும் ஆவணவரி செலவுகளை நீங்கள் கோரலாம்.<br>• வாடகை பற்றாக்குறைகள் (அதாவது, சொத்தை வாடகைக்கு விட ஏற்படும் கழிதுக்கொள்ளக்கூடிய செலவுகள் அந்தச் சொத்திலிருந்து கிடைத்த மொத்த வாடகையைக் காட்டிலும் அதிகமாக இருத்தல்) வேறு எந்த வித வருமானத்திற்கு எதிராகவும் ஈடு செய்ய முடியாது.<br>• உங்கள் வாடகை வருமானத்தை கணக்கிட, எங்கள் 'Rental Calculator'-ஐ IRAS– இன் இணையதளத்தை காணவும்.<br>• வாடகை நிவாரண வரைச்சட்டத்தின் கீழ் தகுதி பெற்ற குடியிருப்பிற்கு அல்லாத சொத்திலிருந்து கிடைக்கும் வாடகையை அறிவிக்க, செல்க IRAS' website [Home > News & Events > Singapore budget > COVID-19 Support Measures and Tax Guidance > Tax Guidance > For Individuals > Rental Relief Framework – Reporting YA 2021 rental income by individuals who are owners of non-residential properties] |

| | |
|---|---|
| | வாடகைக்கு விடப்பட்ட குடியிருப்பு சொத்துக்கு மட்டும் வாடகை செலவுகளைக் கோருதல்<br>• சிங்கப்பூரில் உள்ள ஒரு குடியிருப்பு சொத்திலிருந்து முனைப்பற்ற வாடகை வருமானத்தை பெறுவதற்கான செலவுகளுக்கு கீழ்க்கணும் ஏதேனும் ஒன்றைக் கோரலாம்:<br>(அ) அடமானக் கடன் வட்டி மற்றும் மொத்த வாடகையில் 15%-ஐ கருதத்தக்க வாடகைச் செலவுகளாக, நிபந்தனைகளுக்கு உட்பட்டு; அல்லது<br>(ஆ) செலவிடப்பட்ட உண்மையான வாடகைச் செலவுகள்.<br>• குடியிருப்புச் சொத்துக்களில் குடியிருப்பு அல்லாத பயன்பாட்டிற்கு (எ.கா குழந்தைப் பராமரிப்பு நிலையம், ஊழியர் தங்கும் விடுதி போன்றவை) அனுமதி அளிக்கப்பட்ட எந்தச் சொத்தும் உள்ளடங்கா. மேல் விபரங்களுக்கு, IRAS இணையப்பக்கத்தில் உள்ள “Simplification of Claim of Rental Expenses for Individual” என்ற IRAS e-Tax வழிகாட்டியை அன்புகூர்ந்து பார்க்கவும்.<br><br><u>கருதப்படும் வாடகை செலவுகளை அடிப்படையாகக் கொண்ட வாடகை செலவுகளுக்கு</u><br>• நாங்கள் மொத்த வாடகையில் 15% - ஐ வாடகைச் செலவுகளாக தானாகவே அனுமதிப்போம்.<br>• உங்களின் வாடகைச் செலவுகள் தொடர்பான பதிவேடுகளை நீங்கள் வைத்திருக்கத் தேவையில்லை.<br>• வாடகைக்கு விடப்பட்ட சொத்தை வாங்குவதற்கு எடுத்த கடனுக்குச் செலுத்தும் அடைமானக் கடன் வட்டி, ஏதும் இருந்தால், நீங்கள் கோரலாம். எனினும் நீங்கள் அடைமானக் கடன் வட்டி தொடர்பான ஆதாரப் பத்திரங்ளை சரிபார்க்கும் நோக்கங்களுக்காகக் குறைந்தது 5 ஆண்டுகளுக்கு வைத்திருக்க வேண்டும்.<br>• வாடைகைக்கு விடப்பட்ட மற்ற எல்லா குடியிருப்புச் சொத்துக்களுக்கும் கருதப்படும் செலவுகள் அடிப்படையே உபயோகிக்கப்பட வேண்டும்.<br><br>இந்தக் கருதப்படும் செலவுகள் விருப்பத்தேர்வு பின்வரும் சூழ்நிலைகளில் பொருந்தாது:<br>• பெற்ற வாடகை வருமானம் தொடர்பாக நீங்கள் கழித்துக்கொள்ளக்கூடிய செலவு (அடமானக் கடன் வட்டி தவிர்த்து) எதையும் செய்யவில்லை; அல்லது<br>• நீங்கள் இந்த வாடகை வருமானத்தை சிங்கப்பூரில் ஒரு கூட்டுத் தொழில் மூலம் பெற்றீர்கள்; அல்லது<br>• நீங்கள் இந்த வாடகை வருமானத்தை ஓர் அறங்காவலின் கீழ் இருக்கும் சொத்திலிருந்து பெற்றீர்கள்; அல்லது<br>• நீங்கள் இந்த வாடகை வருமானத்தை குடியிருப்பு அல்லாத பயன்பாட்டிற்கு (எ.கா குழந்தைப் பராமரிப்பு நிலையம், ஊழியர் தங்கும் விடுதி போன்றவை) அனுமதி அளிக்கப்பட்ட சொத்திலிருந்து/ பெற்றிருக்கிறீர்கள்.<br><br><u>நீங்கள் உண்மையான செலவுகளின் அடிப்படையில் கோர விருப்பத்தேர்வு செய்திருந்தால்</u><br>• அன்புகூர்ந்து ஆதராபூர்வ ஆவணங்களை (எ.கா. வாடகை ஒப்பந்தங்கள், வங்கி அடமானக் கடன் அறிக்கைகள் மற்றும் கட்டணச்சீட்டுகள்) குறைந்தது 5 ஆண்டுகளுக்கு சரிபார்க்கும் நோக்கங்களுக்காக வைத்திருங்கள்.<br><br>குடியிருப்பு அல்லாத வாடகைக்கு விடப்பட்ட சொத்துக்களுக்காக மட்டும் வாடகைச் செலவுகளைக் கோருதல்<br>• செலவிடப்பட்ட உண்மையான வாடகைச் செலவுகளை மட்டும் நீங்கள் கோரலாம்.<br>• நீங்கள் ஆதாரப் பத்திரங்களை சரிபார்க்கும் நோக்கங்களுக்காகக் குறைந்தது 5 ஆண்டுகளுக்கு வைத்திருக்க வேண்டும்.<br>• மேல் தகவல்களுக்கு, செல்க, IRAS’ website [Home > taxes > individual-income-tax > basics of individual income tax > what is taxable, what is not > income from property rented out] |
| 3. உரிமைத்தொகை | • உரிமைத்தொகை என்பது பதிப்புரிமை, காப்புரிமை, வர்த்தகச் சின்னங்கள் முதலியவற்றைப் பயன்படுத்தும் உரிமைக்காகப் பெறப்படும் வருமானம் ஆகும்.<br>• இலக்கியம்சார்ந்த, நாடகம்சார்ந்த, இசை தொடர்பான அல்லது கலைசார்ந்த படைப்பு (செய்தித்தாள்கள் அல்லது பத்திரிக்கைகளில் பிரசுரிக்கப்படும் படைப்புகளுக்கான பண வழங்கீடு தவிர்த்து) ஆகியவைகளுக்காகப் பெறப்பட்ட உரிமைத்தொகையில், வரிவிதிப்பிற்கு உட்பட்ட தொகை என்பது உரிமைத்தொகையில் அனுமதிக்கக்கூடிய கழிவுகளுக்குப் பின் எஞ்சும் தொகை அல்லது மொத்த உரிமைத் தொகையில் 10%, இவற்றில் எது குறைவோ. |
| 4. கட்டணம் | • கட்டணத் தொகை நீதிமன்ற ஆணை அல்லது உடன்பாட்டின் படி கிடைக்கும் வருமானத்தை உள்ளடக்கும்.<br>• மாது ஒருவர், தன் முன்னால் கணவரின் சொந்த விருப்பத்தின் பேரில் அல்லது நீதிமன்ற ஆணை அல்லது பிரிவினை ஆவணத்தின் கீழ் பெறும் வாழ்க்கைப் பணம் மற்றும் பராமரிப்புத் தொகை அனைத்தும் வரி விலக்கு பெற்றவை. |
| 5. இறந்தவர் சொத்து / அறங்காவல் வருமானம் | • நிர்வாகத்தின் கீழுள்ள இறந்தவர் சொத்திலிருந்து பங்கிடப்பட்டு (இறந்தவர் சொத்து வருமானம்) கிடைக்கப்பெற்ற வருமானம் அல்லது தனியார் அறங்காவில் இருந்து அல்லது அறங்காவலில் நிர்வாகம் செய்யப்பட்ட இறந்தவர் சொத்திலிருந்து கிடைக்கப்பெற்ற உங்களின் உரிமையுள்ள பங்கு (அறங்காவல் வருமானம்) போன்றவை இறந்தவர் சொத்து/ அறங்காவல் வருமானத்தில் உள்ளடங்கும்.<br>• அன்புகூர்ந்து, இறந்தவர் சொத்து வருமானத்தை, நீங்கள், அந்த வருமானம் கிடைக்கப்பெற்ற ஆண்டிலேயே தெரிவியுங்கள். அறங்காவல் வருமானத்திற்கு அன்புகூர்ந்து வருமானத்திலான உங்கள் பங்கை நீங்கள் உரிமை பெற்றிருக்கும் அந்த ஆண்டிலே தெரிவியுங்கள்.<br>• மூலதனப் பங்கீடு மற்றும் விலக்கு பெற்ற வருமானத்தை நீங்கள் தெரிவிக்க வேண்டியதில்லை. |

| | |
|---|---|
| 6. வட்டி | • அங்கீகாரம் பெற்ற வங்கிகள் மற்றும் சிங்கப்பூரில் உரிமம் பெற்ற நிதி நிறுவனங்களில் உள்ள வைப்புத் தொகையிலிருந்து பெறப்பட்ட வட்டி, வரி விலக்குப் பெற்றது என்பதால், நீங்கள் அதைத் தெரிவிக்க வேண்டாம்.<br>• எனினும், அங்கீகாரம் பெற்றிராத வங்கிகள் அல்லது சிங்கப்பூரில் உரிமம் பெற்றிராத, நிதி நிறுவனங்களில் உள்ள வைப்புத் தொகை, அடகுக் கடைகள், தொழில் நிறுவனங்கள் மற்றும் தனி நபர்களுக்குக் கொடுக்கும் கடன், போன்ற மற்றவைகளில் இருந்து பெறும் வட்டியை நீங்கள் இணைப்பில் தெரிவிக்க வேண்டும்.<br>• அங்கீகாரம் பெற்ற வங்கிகள் மற்றும் சிங்கப்பூரில் உரிமம் பெற்ற நிதி நிறுவனங்களின் பட்டியலை MAS-இன் இணையப்பக்கத்தில் காண்க. |
| 7. இனங்கள் 1 முதல் 6 வரையில் அடங்காத வருமானத் தன்மை வாய்ந்த ஆதாயங்கள் அல்லது இலாபங்கள் | • மேலே குறிப்பிடப்பட்ட வருமானப் பிரிவுகள் எதிலும் சேராத வருமானம் (எ.கா. வாகனம் போன்ற மற்ற சொத்திலிருந்து பெற்ற வாடகை அதை வர்த்தகமாக அறிவிக்காதபோது) ஏதாவது இருந்தால், அவை இதில் உள்ளடங்கும்.<br>• இதற்கு எடுத்துக்காட்டாக, NTUC Healthcare கூட்டுறவு நிறுவனத்திலிருந்து (NTUC Fairprice Co-operative மற்றும் NTUC Income Insurance Co-operative Ltd போன்ற கூட்டுறவு நிறுவனத்தில் இருந்து கிடைத்த லாப ஈவுகள் தானகவே சேர்த்துக்கொள்ளப்படும்) கிடைத்த லாப ஈவுகள். |
| 8. மொத்தம் (மொத்தம் இனங்கள் 1 முதல் 7 வரை) | • இனங்கள் 1 முதல் 7-இல் தெரிவிக்கப்பட்ட மொத்த வருமானத்தைக் குறிப்பிடவும், வாடகையிலிருந்தான நிகர இழப்பை தவிர்த்து.<br>• இந்த மொத்தத் தொகையை படிவம் B1, பக்கம் 2-இல் இனம் 3-இல் குறிப்பிடவும். |
| 9. முன்பு தெரிவிக்கப்படாத வருமானம் | • 1 ஜனவரி 2017 முதல் 31 டிசம்பர் 2020 வரையிலான ஏதாவது ஒரு காலகட்டத்தில் முன்னர் தெரிவிக்கப்படாத வருமானத்தை நீங்கள் பெற்றிருந்தால், அன்புகூர்ந்து வருமான வகை, வருமானம் பெறப்பட்ட நாள், அந்த வருமானம் எந்த காலகட்டத்திற்குரியது மற்றும் வருமானத் தொகை ஆகியவற்றைக் குறிப்பிடவும்.<br>• இயக்குநரின் கட்டணங்களுக்கு, நிறுவனத்தின் ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் அல்லது மிகைபட்ட பொதுக் கூட்டத்தில், எந்த நாளில் இக்கட்டணங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது என்று குறிப்பிடவும். |

| **படிவம் B1, பக்கம் 2-இல் பிரிவு B மற்றும் இணைப்பு 2-ஐ பூர்த்திசெய்தல்: சொந்த நிவாரணங்கள் மற்றும் கழிவுகள்** | |
|---|---|
| நன்கொடைகள்/ நிவாரணங்கள் போன்றவற்றிற்குறிய பொதுத் தகவல்கள் | வரி மதிப்பீட்டில் தானாகவே சேர்க்கப்படும் நன்கொடைகள்/ நிவாரணங்கள்<br>• கீழ்க்காணும் நன்கொடைகள் / நிவாரணங்களை நீங்கள் கோர வேண்டியதில்லை. உங்களின் தகுதிக்கு ஏற்ப மற்றும் தொடர்புடைய நிறுவனத்தின் பதிவேடுகளிலிருந்து தானாகவே இவைகள் உங்கள் வரி மதிப்பீட்டில் சேர்க்கப்படும்:<br>(அ) அங்கீகாரம்பெற்ற பொதுநல அறக்கொடை அமைப்புகளுக்கு (IPCs) நேரடியாக அளித்த நன்கொடைகள்.<br>(ஆ) AIS-இல் பங்கெடுக்கும் உங்களின் முதலாளி மூலமாக கிடைக்கப்பெறும் சம்பளத்திலிருந்து கழித்து (IPC)-கு அளிக்கப்பட்ட நன்கொடைகள்.<br>(இ) ஈட்டிய வருமான நிவாரணம்<br>(ஈ) ம.சே.நி பணம் நிரப்புதல்<br>(உ) துணை ஓய்வூதியத் திட்டம் (SRS)<br>(ஊ) தேசிய சேவையாளர் நிவாரணம் (தேசிய சேவையாளருக்கு, அவரின் மனைவிக்கு அல்லது பெற்றோருக்கு)<br><br>வரி மதிப்பீட்டில் தானாகவே சேர்த்துக்கொள்ளப்படாத நன்கொடைகள் / நிவாரணங்கள்<br>• படிவம் B1, பக்கம் 2-இல் உள்ள தொடர்புடைய பெட்டிகளில் நீங்கள் கோரும் தொகையைக் குறிப்பிடுவதற்கு முன், அனைத்து தகுதி நிபந்தனைகளும் உங்களுக்கு இருக்கிறதா என்று உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.<br>• தவறான நிவாரணங்கள் கோரிக்கைகளுக்கு அபராதம் விதிக்கப்படலாம். உங்கள் மதிப்பீட்டை நாங்கள் மறு ஆய்வு செய்யும்போது உங்கள் கோரிக்கையை நாங்கள் நீக்கிவிடுவோம்.<br>• நீங்கள் முதன்முறையாக உடற்குறையுள்ளவர்கள் தொடர்பான வரி நிவாரணத்தை (ங்களை) கோரினால், நீங்கள் “Application for Claim of Handicapped – Related Tax Reliefs” எனும் படிவத்தை IRAS– இன் இணையதளதிருந்து பதிவிறக்கம் செய்து நிரப்பவும்.<br><br>• வரி மதிப்பீட்டு ஆண்டு 2018 முதல், ஒரு மதிப்பீட்டு ஆண்டிற்கு மொத்த தனி நபர் வருமான வரி நிவாரணங்களின் உச்சவரம்பு $80,000 ஆக இருக்கும்.<br>• நீங்கள் தகுதி நிபந்தனைகளை பூர்த்தி செய்தீர்களானால், தனி நபர் நிவாரணங்களை கோருவதை நீங்கள் தொடர்ந்திட வேண்டும். கோரிய நிவாரணங்களின் மொத்தத் தொகை $80,000-ஐ தாண்டினால் மொத்த வரி நிவாரணங்களின் உச்சவரம்பு $80,000 ஆக நிர்ணயிக்கப்படும். |
| 5. நன்கொடைகள் | • உங்கள் முதலாளி வேலை வருமானத்தைக் தானாகவே சேர்த்துக் கொள்ளும் திட்டத்தில் இல்லை என்றால், அங்கீகாரம்பெற்ற IPC-கு உங்கள் சம்பளத்திலிருந்து கழித்துக்கொள்ளப்பட்ட நன்கொடையின் மதிப்பில் 2.5 மடங்குத் தொகையை குறிப்பிடவும் (அடுத்த முழு வெள்ளித் தொகையைக் குறிப்பிடவும்). நன்கொடைத் தொகை படிவம் IR8A-இல் குறிப்பிடப்பட்டிருக்கும். |

<table>
<tr>
<td>6a. வாழ்க்கைத் துணை/ உடற்குறையுள்ள வாழ்க்கைத் துணை நிவாரணம்<br><br>நீங்கள் இந்த நிவாரணத்தைக் கோரியிருந்தால், உங்கள் வாழ்க்கைத் துணையின் பேரில் வேறு யாரும், பேரப்பிள்ளைகளைப் பராமரிக்கும் தாத்தா பாட்டியர் நிவாரணம் தவிர, வேறு எந்த நிவாரணத்தையும் (எ.கா பெற்றோர்/ உடற்குறையுள்ள பெற்றோர் நிவாரணம்), கோர அனுமதிக்கப்பட மாட்டா</td>
<td>வாழ்க்கைத் துணை நிவாரணம்<br>• நீங்கள் பின்வருமாறு கோரலாம்:<br>(அ) நீங்கள் 2021-ஆம் ஆண்டில் உங்கள் வாழ்க்கைத் துணையுடன் வசித்திருந்தால் அல்லது பராமரித்திருந்தால், $2,000 கோரலாம்; அல்லது<br>(ஆ) நீங்கள் சட்டப்படி பிரிந்திருந்து, நீதிமன்ற ஆணை / பிரிவினை உடன்படிக்கையின்படி, உங்கள் மனைவிக்கு முந்திய ஆண்டில் பராமரிப்புத் தொகையைக் கொடுத்திருந்தால், நீங்கள் $2,000 வரை கோரலாம்.<br>• வாழ்க்கைத் துணை நிவராணத்திற்கான மொத்த கழிவு $2,000-கு மேல் போகக்கூடாது.<br>• உங்கள் வாழ்க்கைத் துணை 2021-ஆம் ஆண்டில், $4,000-கு மேல் ஆண்டு வருமானம் பெற்றிருந்தால், நீங்கள் வாழ்க்கைத் துணை நிவாரணத்தைக் கோர முடியாது.<br>• இந்த நோக்கத்திற்காக, வருமானம் என்பது வரி விதிப்புக்கு உட்பட்ட வருமானம் (எ.கா வர்த்தகம், வேலை, மற்றும் வாடகை), வரி விலக்குப் பெற்ற வருமானம் (எ.கா. வங்கி வட்டி, லாப ஈவுகள் மற்றும் ஒய்வூதியம்) மற்றும் வெளிநாட்டிலிருந்து பெறப்பட்ட வருமானம் (அது சிங்கப்பூருக்கு அனுப்பப்பட்டதா இல்லையா என்பது பொருட்டல்ல) முதலியவற்றை உள்ளடக்கும்.<br><br>உடற்குறையுள்ள வாழ்க்கைத்துணை நிவாரணம்<br>• நீங்கள் பின்வருமாறு கோரலாம்:<br>(அ) உடல் அல்லது மன அளவில் உடற்குறையுள்ள வாழ்க்கைத் துணையை நீங்கள் 2021-ஆம் ஆண்டில் பராமரித்திருந்தால், $5,500 கோரலாம்; அல்லது<br>(ஆ) சட்டப்படி நீங்கள் உங்கள் உடற்குறையுள்ள மனைவியிடமிருந்து பிரிந்திருந்து, நீதிமன்ற ஆணை/பிரிவினை உடன்படிக்கையின்படி, முந்திய ஆண்டில் உங்கள் உடற்குறையுள்ள மனைவிக்குப் பராமரிப்புத் தொகையைக் கொடுத்திருந்தால், நீங்கள் $5,500 வரை கோரலாம்.<br>• உடற்குறையுள்ள வாழ்க்கைத் துணை நிவாரணத்துக்கான மொத்தக் கழிவு $5,500-கு மேல் போகக்கூடாது.<br><br>• தனிப்பட்ட ஆண் குடியிருப்பாளர் ஒருவர், நீதிமன்ற ஆணையின்படி தம் முன்னாள் மனைவிக்கு கொடுத்த வாழ்க்கைப் பணம் தொடர்பில் எந்த நிவாரணமும் கோர முடியாது.</td>
</tr>
<tr>
<td>6b. பிள்ளை நிவாரணம்<br><br>நீங்கள் இந்த நிவாரணத்தைக் கோரியிருந்தால், அதே பிள்ளைக்கு வேறு யாரும் எந்த நிவாரணத்தையும் (எ.கா உடற்குறையுள்ள உடன்பிறந்தவன் / உடன் பிறந்தவள் நிவாரணம்), கோர அனுமதிக்கப்பட மாட்டா</td>
<td>• தகுதிபெறும் பிள்ளை நிவாரணம் (QCR) / உடற்குறையுள்ள பிள்ளை நிவாரணத்தை (HCR) நீங்கள் கோரலாம் அப்படி உங்களுக்கும் உங்களின் வாழ்க்கைத் துணைக்கும் / முன்னாள் வாழ்க்கைத் துணைக்கும் இடையே பிறந்த பிள்ளை, மாற்றான் பிள்ளை அல்லது சட்டப்பூர்வமாக தத்தெடுக்கப்பட்ட பிள்ளை இருக்குமாயின்.<br>• நீங்கள்QCR அல்லது HCR கோரும் தொகையை, உங்களின் வாழ்க்கைத் துணை / முன்னாள் வாழ்க்கைத்துணை ஒப்பு கொண்டதற்கிணங்க பிரித்துக்கொள்ளலாம்.<br>• நீங்கள் 5-வது மற்றும் அதற்கடுத்த பிள்ளைகளுக்கு நிவாரணம் கோரினால், அன்புர்கூர்ந்து விவரங்களைத் தனித்தாளில் எழுதி அனுப்பவும் மற்றும் படிவம் B1, பக்கம் 2-இல், 6(b) இனத்தில் 5-வது வரிசையில் மொத்த கோரலைக் குறிப்பிடவும்.<br><br>தகுதிபெறும் பிள்ளை நிவாரணம் (QCR)<br>• நீங்கள் பராமரித்த, 2021- இல் முழுமைக்கும் மணமாகாத உங்களின் ஒவ்வொரு பிள்ளைக்கும், $4,000 வரை நீங்கள் கோரலாம், அந்தப் பிள்ளை;<br>(அ) 2021-இல் எக்காலகட்டத்திலும், 16 வயதிற்கும் கீழ்பட்டவர்; அல்லது<br>(ஆ) 2021-இல் 17 வயது அல்லது அதற்கு மேற்பட்டவர் என்றால், அவர் பள்ளியில், கல்லூரி, பல்கலைக்கழகம், அல்லது பிற கல்வி நிலையங்கள் ஏதேனும் ஒன்றில் முழு நேரக் கல்வி பெறுபவராக இருக்க வேண்டும்; மற்றும்<br>(இ) 2021-ஆம் ஆண்டில் $4,000-கு மேல் ஆண்டு வருமானம் பெற்றிருக்கக் கூடாது.<br>• இந்த நோக்கத்திற்காக, வருமானம் என்பது வரி விதிப்புக்கு உட்பட்ட வருமானம் (எ.கா வர்த்தகம், வேலை, தேசிய சேவையாளர் சம்பளம்/ படிக்காசு மற்றும் உள்ளகப் பயிற்சி மற்றும் இணைப் பயிற்சியின் போது பெற்ற வருமானம்), வெளிநாட்டுடிலிருந்து பெறப்பட்ட வருமானம் (அது சிங்கப்பூருக்கு அனுப்பப்பட்டதா இல்லையா என்பது பொருட்டல்ல) மற்றும் வரி விலக்குப் பெற்ற வருமானம் (எ.கா வங்கி வட்டி) முதலியவற்றை உள்ளடக்கும், ஆனால் உபகாரச் சம்பளமும் மற்றும் கல்வி உதவித் தொகைகளும் இதில் சேரா.<br><br>உடற்குறையுள்ள பிள்ளை நிவாரணம் (HCR)<br>• 2021-இல் உடல் அல்லது மன அளவில் குறையுள்ள மற்றும் 2021-இல் முழுமைக்கும் திருமணமாகாத பிள்ளையை நீங்கள் பராமரித்திருந்தால், நீங்கள் $7,500 கோரலாம்.</td>
</tr>
</table>

**வேலை செய்யும் தாய்மாருக்கான பிள்ளை நிவாரணம் (WMCR)**

- **வேலை செய்யும் தாய்மார்** மணமானவராகவோ, மனவிலக்கு பெற்றவராகவோ அல்லது கைம்பெண்ணாகவோ இருந்து மணமாகாத **31 டிசம்பர் 2021-ல் சிங்கப்பூர் குடிமகனாக** இருக்கும் மற்றும் QCR அல்லது HCR கோரிக்கைக்கான நிபந்தனைகள் அனைத்தையும் பூர்த்தி செய்யும் பிள்ளைக்கு கோரலாம்.

  மொத்த QCR/HCR + WMCR = ஒவ்வொரு பிள்ளைக்கும் $50,000 *
  மொத்த WMCR தாயாரின் ஈட்டிய வருமானத்தில் 100% வரம்பிடப்படும்

  *QCR/HCR, தந்தை அல்லது தாயாரால் கோரப்பட்டிருந்தாலும், முதலில் அனுமதிக்கப்படும். QCR/HCR அனுமதிக்கப்பட்ட பின் மீதமுள்ளவையே WMCR–ஆக அளிக்கப்படும்.

- **நீங்கள் ஒவ்வொரு பிள்ளையின் பிறப்பு வரிசையை படிவம் B1-இன், 2-ஆம் பக்கத்தில், இனம் 6(b)-உள் கண்டிப்பாக குறிப்பிட வேண்டும். உங்கள் தகுதிநிலையை வைத்து WMCR தானாகவே கணக்கிடப்படும்.**

6c. பெற்றோர் / உடற்குறையுள்ள பெற்றோர் நிவாரணம்

- நீங்கள் 2021-இல் உங்கள் அல்லது உங்கள் வாழ்க்கைத் துணையின் பெற்றோர், பாட்டன் பாட்டி அல்லது முப்பாட்டன் முப்பாட்டி ஆகியோரை ஆதரித்திருந்தால், இந்த நிவாரணத்தைக் கோரலாம். உங்கள் அல்லது உங்கள் வாழ்க்கைத் துணையின் பெற்றோர், பாட்டன் பாட்டி அல்லது முப்பாட்டன் முப்பாட்டி 2021-இல் சிங்கப்பூரில் வசித்திருக்க^ வேண்டும் மற்றும் கீழ்க்காணும் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்திருக்க வேண்டும்:

| **நிபந்தனைகள்** | **பெற்றோர் கோருபவருடன் தங்கியிருத்தல்** | **உடற்குறையுள்ள பெற்றோர் கோருபவருடன் தங்கியிருத்தல்** | **பெற்றோர் கோருபவருடன் தங்கியிருக்கவில்லை #** | **உடற்குறையுள்ள பெற்றோர் கோருபவருடன் தங்கியிருக்கவில்லை #** |
|---|---|---|---|---|
| 2021-இல், 55 வயது அல்லது அதற்கு மேல்<br>2021-இல் ஆண்டு வருமானம்* $4,000 –கு மிகாமல் இருத்தல் | $9,000 | $14,000 (வயது மற்றும் வருமான நிபந்தனைகள் இதற்குப்பொருந்தாது) | $5,500 | $10,000 (வயது மற்றும் வருமான நிபந்தனைகள் இதற்குப்பொருந்தது) |
| பெற்றோர் / உடற்குறையுள்ள பெற்றோர் நிவாரணம் கோர விரும்பும் அனைத்து தகுதியுடைய கோரிக்கையாளர் மத்தியில் இத்தொகை பங்கிடப்படலாம். | கோரிக்கையாளர்களில் **குறைந்தது ஒருவர்** சார்ந்திருப்பவருடன் வசித்தால், பகிர்ந்துகொள்ளப்படும் பெற்றோர் அல்லது உடற்குறையுள்ள பெற்றோர் நிவாரணம் முறையே **$9,000** அல்லது **$14,000** ஆகும். | | கோரிக்கையாளர்களில் **யாரும்** சார்ந்திருப்பவருடன் **வசிக்கவில்லை** என்றால், பகிர்ந்துகொள்ளப்படும் பெற்றோர் அல்லது உடற்குறையுள்ள பெற்றோர் நிவாரணம் முறையே **$5,500** அல்லது **$10,000** ஆகும். | |

- நீங்கள் பெற்றோர் நிவாரணம் அல்லது உடற்குறையுள்ள பெற்றோர் நிவாரணம் ஆகிய இரண்டில் ஒன்றை மட்டுமே ஒரு நபருக்காக கோர முடியும், **அதிகபட்சம் 2 சார்ந்திருப்பவர் வரை கோரலாம்**.
- ஒரே ஒரு சார்ந்திருப்பவரின் பேரில் **கோரப்படும் நிவாரணம் பகிர்ந்துக் கொள்ளபடுமேயானால் கோரிக்கையாளர் அனைவரும் பிரித்துக்கொள்ளும் விகிதம் குறித்து** பெற்றோர் / உடற்குறையுள்ள பெற்றோர் நிவாரணம் கோருவதற்கு முன்பாக **உடன்பாடு** காண வேண்டும். இல்லையெனில் வருமான வரிஆணையர் இந்த நிவாரணத்தைக் கோரிக்கையாளர்கள் அனைவரிடையேயும் சமமாகப் பிரித்தளிப்பார்.
- நீங்கள் இந்த நிவாரணத்தைக் கோரியிருந்தால், அதே சார்ந்திருப்போருக்கு, பேரப்பிள்ளையைப் பராமரிப்பு வழங்கும் தாத்தா பாட்டியர் நிவாரணம் தவிர வேறு எந்த நிவாரணத்தையும் (எ.கா வாழ்க்கைத் துணை நிவாரணம்) கோர அனுமதிக்கப்பட மாட்டா.

^"சிங்கப்பூரில் வசிப்பர் என்றால் "சார்ந்திருப்போர் 2021-இல், தற்காலிகமாக விடுப்பை (எ.கா. குறுகிய கால வெளிநாட்டு விடுமுறைப் பயணம்) தவிர்த்து, சிங்கப்பூரில் நிரந்தரமாக தங்கியிருப்பதாகும். சார்ந்திருப்போர் வெளிநாட்டவர் எனில், (வெளி நாட்டவர் அடையாள அட்டை வைத்திருப்பவர் மட்டும்); அவர் 2021-இல் குறைந்தபட்சம் 8 மாதங்கள் சிங்கப்பூரில் தங்கியிருந்தால், அவரும் சிங்கப்பூரில் வாழ்பவராக கருதப்படுவார்.
*வருமானம் என்பதில் வரி விதிப்புக்கு உட்பட்ட வருமானம் (எ.கா வர்த்தகம், வேலை மற்றும் வாடகை), வரி விலக்குப் பெற்ற வருமானம் (எ.கா வங்கி வட்டி, லாப ஈவுகள் மற்றும் ஓய்வூதியம்) மற்றும் வெளிநாட்டுடிலிருந்து பெறப்பட்ட வருமானம் (அது சிங்கப்பூருக்கு அனுப்பப்பட்டுள்ளதா இல்லையா என்பது பொருட்டல்ல) முதலியவற்றை உள்ளடங்கும்.

| | |
|---|---|
| | #அவர்கள் உங்களுடன் சிங்கப்பூரில், ஒரே வீட்டில் வாழ்ந்திராவிட்டால், அவர்கள் ஒவ்வொருவரையும் பராமரிக்க, 2021-இல் நீங்கள் குறைந்தது $2,000 செலவழித்திருந்தால் மட்டுமே இந்நிவாரணத்தை கோரலாம். |
| 6d. பேரப்பிள்ளையைப் பராமரிக்கும் தாத்தா பாட்டி நிவாரணம் (GCR)<br><br>இதே பராமரிப்பாளருக்கு வேறு யாரேனும் GCR கோரியிருந்தால், நீங்கள் இந்த நிவாரணத்தைக் கோர முடியாது. | • நீங்கள் திருமணமான, மணவிலக்கான அல்லது கைம்பெண்ணான ஒரு **வேலை செய்யும் தாயார்** என்றால், நீங்கள் உங்கள் அல்லது உங்களின் வாழ்க்கைத்துணை / முன்னாள் வாழ்க்கைத் துணையின் பெற்றோர் அல்லது தாத்தா பாட்டியர் **ஒருவருக்கு** உங்கள் ஈட்டிய வருமானத்திலிருந்து $3,000 கழிவு கோரலாம். மேலும் உங்கள் அல்லது உங்கள் வாழ்க்கைத்துணை / முன்னாள் வாழ்க்கைத் துணையின் பெற்றோர் அல்லது தாத்தா பாட்டியர்:<br>(அ) 2021-இல் சிங்கப்பூரில் வசித்திருக்க^ வேண்டும்; மற்றும்<br>(ஆ) உங்கள் பிள்ளைகளில்* ஒருவரை, அவர் கவனித்திருக்க வேண்டும். அப்பிள்ளை, சிங்கப்பூர் குடிமகனான இருந்து (i) 2021-இல் 12 வயதுடையவராக அல்லது அதற்கும் கீழ் வயதினராக இருத்தல் வேண்டும்; அல்லது (ii) 2021- இன் முழுமைக்கும் திருமணமாகாத, உடல் அல்லது மன வளர்ச்சி குன்றியவராக இருத்தல் வேண்டும்: மற்றும்<br>(இ) 2021-இல், வர்த்தகம், வியாபாரம், தேர்ச்சித் தொழில், வாழ்க்கைத் தொழில் அல்லது வேலை செய்து கொண்டிருக்கக்கூடாது.<br>• படிவம் B1-இல் 2-ஆம் பக்கத்தில் இனம் 6(d)-இல் GCR-ஆன உங்கள் கோரலைக் குறிப்பிடவும். *பிள்ளை எனில் உங்களுக்கும் உங்கள் வாழ்க்கைத்துணைக்கும் / முன்னாள் வாழ்க்கைத் துணைக்கும் பிறந்தவர், மாற்றன்பிள்ளை அல்லது சட்டப்பூர்வமாக தத்தெடுக்கப்பட்ட பிள்ளை என்பன ஆகும்.<br><br>^ “சிங்கப்பூரில் வசிப்பர் என்றால் ‘சார்ந்திருப்போர் 2021-இல், தற்காலிகமாக விடுப்பை (எ.கா. குறுகிய கால வெளிநாட்டு விடுமுறைப் பயணம்) தவிர்த்து, சிங்கப்பூரில் நிரந்தரமாக தங்கியிருப்பதாகும். சார்ந்திருப்போர் வெளிநாட்டவர் எனில், (வெளி நாட்டவர் அடையாள அட்டை வைத்திருப்பவர் மட்டும்): அவர் 2021-இல் குறைந்தபட்சம் 8 மாதங்கள் சிங்கப்பூரில் தங்கியிருந்தால், அவரும் சிங்கப்பூரில் வாழ்பவராக கருதப்படுவார். |
| **6e. உடற்குறையுள்ள உடன் பிறந்தவன் / உடன் பிறந்தவள் நிவாரணம்**<br><br>மற்றொருவர் இதே உடன் பிறப்பு(கள்) அல்லது வாழ்க்கைத்துணையின் உடன்பிறப்பின் பேரில் வேறு நிவாரணம் (GCR தவிர), கோரியிருந்தால் நீங்கள் இந்த நிவாரணத்தை கோர முடியாது. | • நீங்கள் சிங்கப்பூரில் வசிக்கும்^ உங்களின் அல்லது உங்கள் வாழ்க்கைத் துணையின், உடல் அல்லது மன வளர்ச்சிக் குன்றிய, உடன்பிறப்புகளைப் பராமரித்திருந்தால், நீங்கள் சார்ந்திருப்போர் ஒவ்வொருவருக்கும் $5,500 கோரலாம். நீங்கள் நிவாரணம் கோரும் உங்களின் அல்லது உங்கள் வாழ்க்கைத் துணையின் உடற்குறையுள்ள உடன்பிறப்புகள், 2021-இல் உங்களுடன் ஒரே வீட்டில் வசித்திருக்க வேண்டும். இல்லையெனில்,2021-இல், அவர்கள் ஒவ்வொருவரின் பராமரிப்பிற்காக நீங்கள் குறைந்தது $2,000 செலவிட்டிருக்க வேண்டும்.<br><br>• இந்த நிவாரணத் தொகையை அதே சார்ந்திருப்போருக்கு நிவாரணம் கோர விரும்பும் உங்கள் **உடன்பிறப்புகள் அல்லது வாழ்க்கைத்துணையின் உடன்பிறப்புகளுடன் பகிர்ந்துகொள்ளலாம்**.<br><br>• தயவுகூர்ந்து உங்கள் கோரலை படிவம் B1, பக்கம் 2-இல், இனம் 6(e)- இல் குறிப்பிடவும். 3-வது மற்றும் அடுத்த உடற்குறையுள்ள உடன்பிறந்தவன் / உடன்பிறந்தவள் நிவாரணக் கோரிக்கைக்கு, அன்புர்கூர்ந்து அடுத்தடுத்த சார்ந்திருப்போருக்கான <u>மொத்த கோரிக்கையை</u> 6(e)-இன் 3-வது வரிசையில் குறிப்பிடவும்.<br><br>^ “சிங்கப்பூரில் வசிப்பர் என்றால்”சார்ந்திருப்போர் 2021-இல், தற்காலிகமாக விடுப்பை (எ.கா. குறுகிய கால வெளிநாட்டு விடுமுறைப் பயணம்) தவிர்த்து, சிங்கப்பூரில் நிரந்தரமாக தங்கியிருப்பதாகும். சார்ந்திருப்போர் வெளிநாட்டவர் எனில், (வெளி நாட்டவர் அடையாள அட்டை வைத்திருப்பவர் மட்டும்): அவர் 2021-இல் குறைந்தபட்சம் 8 மாதங்கள் சிங்கப்பூரில் தங்கியிருந்தால், அவரும் சிங்கப்பூரில் வாழ்பவராக கருதப்படுவார். |
| **6f.** மசேநி / சேமநிதி | சிங்கப்பூரர்கள் மற்றும் சிங்கப்பூர் நிரந்தரவாசிகளின் ம.சே.நி / அங்கீகரிக்கப்பட்ட ஓய்வூதிய அல்லது சேமநிதிக் கட்டாயச் சந்தாக்கள்<br>• இத்தகைய சந்தாக்கள் ம.சே.நி சட்டத்தின் கீழ் உள்ள சட்டப்பூர்வச் சந்தாக்களை விட அதிகமாக இருக்கக்கூடாது.<br>(அ) ம.சே.நி சந்தாக்களுக்கான சாதாரண ஊதிய வரம்பு, ஒரு மாதத்திற்கு $6,000.<br>(ஆ) சாதாரணச் ஊதியம் (OW) ஓர் ஆண்டிற்கான வரம்பு $72,000 (அதாவது 12 மாதங்கள் x $6,000) மற்றும் கட்டாய சேமநிதி சந்தாவுக்கான ஒட்டுமொத்த வருமானத்தின் வரம்பு $102,000 (அதாவது 17 மாதங்கள் x $6,000).<br>(இ) $102,000-இருந்து சாதாரன ஊதியத்தை கழித்தால் கிடைக்கும் தொகையின் சமமான ஒரு தொகையின் அளவுக்கே கூடுதல் ஊதியத்திற்கான வரம்பு இடப்படும்.<br>• உங்கள் வேலை வருமானம் தானாகவே சேர்த்துக்கொள்ளப்பட்டால், நீங்கள் இந்த நிவாரணத்தைக் கோர வேண்டியதில்லை, ஏனெனில் நாங்கள் இத்தகவலை நேரடியாக AIS –இல் இருக்கும் உங்கள் முதலாளியிடமிருந்து பெற்றுக்கொள்வோம்.<br><br>**சொந்த மெடிசேவ் கணக்கில் செலுத்தப்படும் தன்னிச்சை சந்தாக்கள்**<br>• 2021-இல் நீங்கள் ஒரு சிங்கப்பூரர் அல்லது சிங்கப்பூர் நிரந்தரவாசி எனில், நீங்கள் வருடாந்திர ம.சே.நி சந்தா வரம்பான $37,740 (அதாவது 17 மாதங்கள் x $6,000 x 37%) உட்பட்டும் மற்றும் அடிப்படை சுகாதாரப் பராமரிப்புத் தொகைக்கு உட்பட்டும் உங்கள் சொந்த மெடிசேவ் கணக்கில் நீங்கள் குறிப்பிட்டுச் செலுத்திய உங்கள் தன்னிச்சையான ரொக்கச் சந்தாவுக்கு நீங்கள் கழிவு கோரலாம். ஆனால் இத்தகைய தன்னிச்சையான சந்தாவுக்கு நீங்கள் சுயதொழில் புரிபவர் எனும் முறையில் கழிவு கோரியிருக்கக் கூடாது. |
| 6g. ஆயுள் காப்புறுதி | • நீங்கள் உங்கள் அல்லது உங்கள் மனைவியின் ஆயுள் காப்புறுதிகளுக்காகச் செலுத்திய காப்புறுதி கட்டணத்தை நிவாரணமாகக் கழித்துக் கொள்ள கோரலாம். |

| | |
|---|---|
| | • உங்கள் பிள்ளையின் ஆயுள் காப்புறுதிகளுக்காகச் செலுத்திய காப்புறுதிக் கட்டணத்தை நீங்கள் கழிக்க முடியாது.<br>• இந்த நிவாரணத்தைக் கோருவதற்கு, 2021-இல் உங்களின் மொத்த கட்டாய ஊழியர் ம.சே.நி சந்தா அல்லது சுயதொழில் புரிபவரின் மெடிசேவ் / தன்னிச்சியான ம.சே.நி சந்தா மற்றும் மெடிசேவ் கணக்கில் தன்னிச்சையாக செலுத்திய ரொக்கம், **$5,000–கு குறைவாக** இருக்க வேண்டும் மற்றும் காப்புறுதி சந்தாக்கள் 2021-இல் கட்டாயம் செலுத்தியிருக்க வேண்டும்.<br>• நீங்கள் உங்கள் ஆயுள் காப்புறுதியை 1973 ஆகஸ்ட் 10-ஆம் தேதி அல்லது அதற்கு பின் வாங்கியிருந்தால், அந்த காப்புறுதி நிறுவனத்திற்குச் சிங்கப்பூரில் ஓர் அலுவலகம் அல்லது கிளை இருக்க வேண்டும்.<br>• கீழ்க்காண்பவற்றில் எது **குறைவாக உள்ளதோ** அதைக் கோரலாம்:<br>(அ) $5,000 மற்றும் உங்கள் ம.சே.நி சந்தா இடையிலான வேறுபாடு; அல்லது<br>(ஆ) உங்களின் சொந்த / உங்கள் மனைவியின் ஆயுள் காப்புறுதி செய்யப்பட்ட மதிப்பில் 7% வரை அல்லது செலுத்திய காப்புறுதி கட்டணத்தொகை. |
| 6h. கல்விக் கட்டணங்கள் | • பின்வரும் நிலைகளில், நீங்கள் செலுத்திய உண்மையான கல்விக் கட்டணங்களுக்கு நீங்கள் அதிகபட்சமாக $5,500 வரை கழிவு கோரலாம்:<br>(அ) 2021-இல் கீழ்க்காணும் ஏதேனும் படிப்பு அல்லது ஆய்வரங்கு/ மாநாட்டில் கலந்துகொண்டிருந்தால்: (i) ஒப்புதல் பெற்ற கல்வி, நிபுணத்துவ அல்லது தொழில் தகுதிக்கு இட்டுச்செல்லும் ஏதேனும் படிப்பு தொடர்பானது; அல்லது (ii) உங்களின் தற்போதைய வர்த்தகம், வியாபாரம், தேர்ச்சித் தொழில், வாழ்க்கைத் தொழில் அல்லது வேலை தொடர்பானது; அல்லது<br>(ஆ) நீங்கள் 1 ஜனவரி 2019-உம் 31 டிசம்பர் 2020-உம் இடையே ஏதேனும் படிப்பு, ஆய்வரங்கு / மாநாட்டை நிறைவு செய்திருந்துx 2021-ஆம் ஆண்டில் அவற்றுடன் தொடர்புடைய புதிய வர்த்தகம், வியாபாரம், தேர்ச்சித் தொழில், வாழ்க்கைத் தொழில் அல்லது வேலையைத் தொடங்கியிருந்தால்.<br>• அனுமதிக்கப்பட்ட கல்விக் கட்டணங்களில் பதிவு அல்லது நுழைவுக் கட்டணம், தேர்வுக் கட்டணம், துணைப்பாடக் கட்டணம், தகுதிப்பாட்டு தேர்வுக் கட்டணம் (கணினி பாடங்களுக்கு) ஆகியவை அடங்கும். வாழ்க்கை முறைச் செலவு, பாடப்புத்தக செலவு அல்லது பயணச் செலவுகள், மற்றும் கல்விக்காக உங்கள் முதலாளியால் அல்லது மற்ற நிறுவனங்களால் செலுத்தப்பட்ட அல்லது ஈடாகக் கொடுக்கப்பட்டத் தொகை ஆகியவற்றை நீங்கள் கோர முடியாது.<br>• இந்த நிவாரணம் இதுவரை வேலை அல்லது வர்த்தகம், வியாபாரம், தேர்ச்திச் தொழில் ஏதும் செய்திராத பலதுறை தொழில்நுட்பக்கல்லூரி / பல்கலைக்கழகப் பட்டதாரிகளது பலதுறை தொழில்நுட்பக் கல்லூரி / பல்கலைக்கழக் கல்விக் கட்டணங்களுக்குப் பொருந்தாது. கல்விக் கட்டண நோக்கத்திற்கு விடுமுறை கால வேலைகள் அல்லது உள்ளகப் பயிற்சிகள் வேலைகளாக கருதப்படமாட்டது.<br>உங்கள் மதிப்பீட்டிற்குரிய வருமானம் $22,000-கு குறைவாக இருக்குமாயின், நீங்கள் கல்விக் கட்டணங்களுக்கான உங்கள் கோரலை ஒத்திவைக்கலாம். மேல் தகவல் அறிய அன்புகூர்ந்து IRAS -ஐ பார்க்கவும். |
| 6i. வெளிநாட்டு பணிப்பெண்(FDW) தீர்வை | பின்வரும் நிலைகளில் நீங்கள் 2021-இல் **ஒரு** பணிப்பெண்ணுக்குச் செலுத்திய வெளிநாட்டுப் பணிப்பெண்(FDW) தீர்வைத் தொகையை உங்கள் ஈட்டிய வருமானத்திலிருந்து இருமடங்காகக் கழித்துக் கொள்ளலாம்:<br>(அ) 2021-இல் கணவருடன் வாழ்ந்த திருமணமான பெண்ணெனில்; அல்லது<br>(ஆ) 2021-இல் சிங்கப்பூரில் குடியிருக்காதக் கணவரைக் கொண்ட திருமணமான பெண்ணெனில்; அல்லது<br>(இ) கணவரிடமிருந்து பிரிந்து, மணவிலக்கான அல்லது கைம்பெண்ணாக இருப்பதோடு, 2021-இல் தன்னுடன் வாழ்ந்த பிள்ளைக்காக, பிள்ளை நிவாரணம் கோரக்கூடிய பெண்ணெனில்.<br><br>**இத்தீர்வை உங்களால் அல்லது உங்கள் கணவரால் செலுத்தப்பட்டது என்பது ஒரு பொருட்டல்ல**.<br>நீங்கள் பின்வருவனவற்றில் எது குறைவோ அதைக் கோரலாம்:<br>(அ) செலுத்தப்பட்ட வெளிநாட்டு பணிப்பெண் தீர்வையைப் போல் இருமடங்கு, $1,440 வரை (நீங்கள் சலுகைத் தீர்வைக்குத் தகுதி பெற்றிருந்து, மாதம் $60, செலுத்துபவர் எனில்) அல்லது $7,200/$10,800*; அல்லது<br>(ஆ) நீங்கள் ஈட்டிய வருமானத் தொகை.<br><br>*முதலாம் வெளிநாட்டு இல்லப்பணியாளருக்கான தீர்வை விகிதம், சலுகை இல்லாமல், மாதத்திற்கு $300.<br>மொத்த நிவாரணத் தொகை = ($300 x 12) X 2 = $7,200<br><br>அதற்கடுத்த வெளிநாட்டு இல்லப்பணியாளருக்கான தீர்வை விகிதம், சலுகை இல்லாமல், மாதத்திற்கு $450.<br>மொத்தத நிவாரணத் தொகை = ($450 X12) x 2 = $10,800 |
| பெற்றோர்நிலை வரித்தள்ளுபடி (PTR)* | நீங்கள் மணமான, மணவிலக்குப் பெற்ற அல்லது கைம்பெண்ணாக இருப்பின், 2021-இல் சிங்கப்பூரில் வரி செலுத்தும் குடியிருப்பாளர் எனில் மற்றும் உங்களுக்கு ஒரு பிள்ளை இருக்குமாயின் நீங்கள் பின்வரும் நிலையில் பெற்றோர்நிலை வரிச் தள்ளுபடியைக் கோரலாம்:<br><br>(அ) 2021-இல் உங்களுக்கும் உங்கள் வாழ்க்கைத் துணைக்கும் / முன்னாள் வாழ்க்கைத் துணைக்கும் பிறந்த ஒரு குழந்தை; அல்லது<br>(ஆ) 2021-இல் சட்டப்பூர்வமாக தத்து எடுக்கப்பட்ட ஒரு பிள்ளை; ஆனால் அந்த பிள்ளை 6 வயதை அடையும் முன்; அல்லது<br>(இ) உங்களுக்கும் உங்கள் வாழ்க்கைத் துணைக்கும் / முன்னாள் வாழ்க்கைத் துணைக்கும் உங்களின் திருமணத்திற்கு முன் பிறந்த பிள்ளை மற்றும் அப்பிள்ளை 6 வயதை அடையும் முன் நீங்கள் சட்டப்பூர்வமாகத் 2021-இல் திருமணம் செய்து கொண்டிருந்தால்.<br><br>அந்தப் பிள்ளை பின்வரும் காலக்கட்டத்திற்குள் சிங்கப்பூரராக இருக்க வேண்டும்: |

(அ)  பிறப்பின்போது அல்லது அதற்குப் பின் 12 மாதங்களுக்குள்; அல்லது
(ஆ)  சட்டப்படி தத்தெடுத்துக்கொள்ளும் நேரத்தில் அல்லது அதற்கு பின் 12 மாதங்களுக்குள்; அல்லது
(இ)  இயற்கை பெற்றோரின் திருமணத்தின் போது அல்லது அதற்குப் பின் 12

- பெற்றோர்நிலை வரித் தள்ளுபடிக்குத் தகுதி பெற்றிருக்கும் பிள்ளை எனும் பொருட்டில்லாமல் ஒரே வீட்டில் வசிக்கும் உங்கள் அனைத்து பிள்ளைகளுக்கும், பிறந்த நாளை, சட்டப்பூர்வமாக தத்தெடுத்த நாளை அல்லது பெற்றோரின் திருமண நாளை வைத்துதான் உங்கள் பிள்ளையின் பிறப்பு வரிசை நிர்ணயிக்கப்படுகிறது.

- சூழ்நிலைக்கேற்ப, ஒரு பிள்ளையின் பிறப்பின் போது, தத்தெடுக்கும் போது அல்லது பெற்றோரின் திருமணத்தின் போது, அப்பிள்ளையின் உடன்பிறந்தவர்களின் எண்ணிக்கையை நிர்ணயிக்க, அதன் இறந்த உடன்பிறப்பும் கணக்கில் கொள்ளப்படும்.

- தள்ளுபடித் தொகை பின்வருமாறு:
  (அ )  1வது பிள்ளை: $5,000;
  (ஆ)  2 வது பிள்ளை: $10,000;
  (இ )  3 வது மற்றும் அதற்கடுத்த பிள்ளை: ஒவ்வொரு பிள்ளைக்கும் $20,000

பெற்றோர்நிலை வரித் தள்ளுபடியை (PTR) நீங்களும் உங்களின் வாழ்க்கைத் துணையும் ஒப்பு கொண்டதற்கிணங்க பிரித்துக்  பகிர்ந்து கொள்ளலாம். உங்கள் PTR கோரல் சதவிகித கூட்டுத்தொகை 100% எட்டவில்லையென்றால் அல்லது உங்கள் இருவராலும் பங்கீட்டிற்கு ஒத்துக்கொள்ள முடியவில்லையென்றால், நாங்கள் PTR-ஐ உங்கள் இருவருக்கும் சமமாக பகிர்ந்தளிப்போம். PTR-ஐ உங்கள் மற்றும்/அல்லது உங்கள் வாழ்க்கைத்துணையின் வருமான வரிக்கு எதிராக ஈடுசெய்திடலாம். மதிப்பீட்டு ஆண்டில் செலுத்தப்பட வேண்டிய வரித் தொகை, தள்ளுபடியை விடக் குறைவாக இருந்தால், பயன்படுத்தப்படாத தள்ளுபடியை, வரும் ஆண்டுகளில் வருமான வரிக்கு எதிராக தள்ளுபடி முடியும் வரை முழுமையாக பயன்படுத்திக் கொள்ளலாம்.

நீங்கள் பெற்றோர்நிலை வரித் தள்ளுபடியை (PTR) முதன்முறையாகக் கோருகிறீர்கள் என்றால், தயவுகூர்ந்து இணைப்பு 2-இன் இனம் 7 –ஐ நிறைவு செய்து பின்வரும் ஆவணங்களின் நிழற்பிரதியை அனுப்பவும், பொருந்துமாயின்:
(அ)   தத்து எடுத்த பிள்ளை எனில் சட்டப்பூர்வ தத்து பத்திரங்கள்; மற்றும்/அல்லது
(ஆ)  சிங்கப்பூருக்கு வெளியே பதிவு செய்யப்பட்ட திருமணத்திற்குத் திருமணச் சான்றிதழ்.

- எந்தப் பிள்ளையும் இரு குடும்பங்களின் உறுப்பினராக கருதப்படாது. பிள்ளையின் பாதுகாப்பு உரிமை, பராமரிப்பு மற்றும் கட்டுப்பாடு மற்றும் பிள்ளையின் வாழ்வியல் ஏற்பாடு ஆகியவற்றின் அடிப்படையில் முந்தைய திருமணத்தின் மூலம் பிறந்த பிள்ளை ஒரு பெற்றோரது குடும்பத்துடன் மட்டுமே சேர்த்துக்கொள்ளப்படும்.

- பயன்படுத்தப்படாமல் இருக்கும் தொகை இணையம்வழி myTaxPortal-இருந்து உங்கள் கணக்கிலிருந்து உங்கள் வாழ்க்கைத்துணை கணக்கிற்கு மாற்றிக் கொள்ளலாம்.

*உங்களின் தகுதிபெற்ற பிள்ளையை வேறொரு குடும்பத்திற்கு தத்து கொடுத்திருந்தால், இந்த நிகழ்வு நடைபெற்ற ஆண்டைத் தொடர்ந்து வரும் மதிப்பீட்டு ஆண்டிலிருந்த இந்த பிள்ளைக்காக வழங்கப்பட்ட பெற்றோர்நிலை வரித் தள்ளுபடியில் உள்ள மீதத் தொகையை நீங்களும் உங்கள் வாழ்க்கைத் துணையும் இழக்க நேரிடும்.
*மணவிலக்கானவர்கள் தங்கள் மணவிலக்குக்குப் பிறகும் மீதமுள்ள பெற்றோர்நிலை வரித் தள்ளுபடியைத் (PTR) தொடர்ந்து பயன்படுத்த அனுமதிக்கப்படுவார்கள். மணவிலக்கானவர் மறுமணம் செய்து கொண்டால், முந்திய திருமணத்தில் பிறந்த பிள்ளையின் பெற்றோர்நிலை வரித் தள்ளுபடியின் (PTR) மீதத் தொகையைப் புதிய வாழ்க்கைத் துணையுடன் பங்கிட்டுக் கொள்ள அனுமதியில்லை.